# கவிதையும் பெண் ஆளுமையும்

முனைவர் ஆ.சிவனருட்செல்வி
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

**ஆய்வுச்சுருக்கம்**

ஆளுமை என்பது தன்னைத் தானே ஆள்வதும் பிறரை நம் சொல்லுக்கு கட்டுப்பட வைப்பதும் ஆகும். இடத்திற்கு இடம் ஆளுமைத்திறன் மாறவேண்டும். இந்த ஆளுமை பிறவியிலிருந்து வளர ஆரம்பிக்கிறது என்று கூறலாம். குழந்தைகளிடம் குழந்தையாகவும் பெரியவர்களிடம் பெரியவர்களாகவும், இளையவர்களிடம் இளையவர்களாகவும் மாறத் தெரிந்தவர்களே ஆளுமைக்கு உரியவர்கள் எனலாம். உனக்குப் பிடித்தவர் யார் என்று கேட்டால் நாம் அப்பா, அம்மா, நண்பர், ஆசிரியர், தலைவர் என்று மனதிற்குப் பிடித்தவர்களைக் கூறுவோம். காரணம் அவர்கள் ஏதோ ஒரு வகையில் நம்மை அறியாமலேயே அவர்கள் நம்மை ஆள்கிறார்கள் என்பதே இதன் பொருளாகும்.

**திறவுச்சொற்கள்**

பன்முகஆளுமை - உளவியல் - பிரச்சனைகள் - பொருளாதார சமத்துவம் - முரண்பாடுகள்

**முன்னுரை**

ஒருவரின் ஒழுங்கான நடத்தை தோரணை, உணர்வு, சிந்தனை, வெளித்தோற்றம் தனித்துவம், எண்ணங்கள் ஆகியவை ஒருவரின் மனதிலிருந்து தோன்றுபவை, இதை நாம் ஆளுமை என்று கூறலாம். ஒருவர் சூழலுக்கு ஏற்ப நடந்து கொள்வதும் ஆளுமையாகும்.புதுமையான செயல்கள், ஆக்கப் பூர்வமான யோசனைகளோடும் சிறந்து உரையாடக் கூடியவர்களும் மற்றவர்களுடன் விவாதங்கள் செய்து வெற்றிகாண்பதும் ஆளுமை. பிறருக்கு கட்டுப்படாமல் இருப்பதும் ஆளுமை என்றே கூறலாம். கவிதைகளில் பெண் ஆளுமையை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆளுமை என்பதன் பொருள்**

ஆளுமை என்னும் தமிழ்ச்சொல் 'பர்சனாலிட்டி' (Personalily) என்னும் ஆங்கிலச்சொல்லின் கருத்துருவைக் குறிக்க ஏற்பட்டது. இலத்தீன் மொழியில் 'பர்சனா' (Persona) என்பது 'மறைப்பு' 'முகமூடி' என்னும் பொருள் தருவது. ஆளுமை என்பது "ஒருவர் அணிந்திருக்கும் முகமூடி என்னும் கருத்துருவின் அடிப்படையைக் கொண்டுள்ளது" என்பர் - ta.m.wikipedia.org.

ஆளுமையின் கூறுகளாக நான்கினைக் கூறுவர்.

1. சீராக இருத்தல் - பல்வேறு நிலைகளில் ஒரே மாதிரியாகவே ஒருவர் செயல்படுவது.
2. உளவியல், உடலியல் சார்ந்து அமைதல் - உளவியல் உருவாக்கத்தையும், உடலின் செயல்முறைகளையும், உள்ளடக்கியது.
3. நடத்தைகளையும் செயல்களையும் பாதித்தல் - ஒருவர் எவ்வாறு சூழலுக்கு ஏற்ப நடந்து கொள்கிறார்கள் என்பதோடு அவ்வாறு நடந்து கொள்ளுவதற்கு காரணமாகவும் ஆளுமை அமைகின்றது.
4. பன்முகவெளிப்பாடு - ஆளமை நடத்தையோடு மட்டும் வெளிப்படாமல் எண்ணம், உணர்வு போன்ற பிற சமூகத் தொடர்பால் வெளிப்படுகிறது.



Scanned by CamScanner

இன்றைய சூழலில் நல்ல ஆளுமை உடைய பெண்களால் தான் சமூகம் விருத்தியடையும். அந்த வகையில் பெண்ணின் ஆளுமை முக்கியமாகின்றது. பெண்ணின் ஆளுமை குடும்பதையும், சமூகத்தையும் முன்னேற்றும் ஒரு கருவி என்று கூறலாம். பெண்ணின் வெளித்தோற்றத்தை (அழகு, நடை, உடை, பாவனை) மட்டும் வைத்து அவரின் ஆளுமையை விளக்க முடியாது. பெண்ணின் அறிவு, திறமை, பணிவு இடத்திற்கு ஏற்ப செயல்பாடு ஆகியவை பெண்ணின் ஆளுமை ஆகும்.

சங்க இலக்கியங்களில் பெண்களின் ஆளுமை குறைந்தே காணப்படுகிறது. ஆணுக்கு வழங்கப்பட்ட அதிகாரம் பெண்ணுக்கு கொடுக்கப்படவில்லை என்றே கூறலாம்.

**"வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்**
**மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"**

(குறுந்.135)

என்ற பாடலில் ஆணின் ஆளுமைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. வினைசெய்யும் ஆடவனுக்கு அவனது தொழில்தான் உயிர் என்றும் வீட்டில் உணவு சமைத்து கொடுக்கும் பெண்ணுக்கு அவளது கணவனே உயிர் என்றும் குறுந்தொகை கூறுகிறது. மேலும் தொல்காப்பியத்தில்,

**"தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்**
**எண்ணுங் காலை கிழத்திக்கில்லை"**

(நூற்.1064)

என தொல்காப்பியம் கூறுகிறது. தனது ஆசையைக்கூறும் ஆணுக்கு மட்டுமே உரிமை உண்டு பெண்களுக்கு இல்லை என்கிறது.

பெண் தனது ஆளுமையை ஆணிடமும், சமூகத்திலும் தொலைந்து விட்டாள் அவளின் ஆளுமையை ஆண் எழுதிய இலக்கியங்களில் தான் காணமுடிகிறது. இலக்கியங்களில் பெரும்பாலும் ஆண் ஆளுமையைப் பற்றியே கூறிச்செல்கின்றன. ஒரு சில இலக்கியங்கள் மட்டும் பெண் ஆளுமை வெளிப்படுவதாக இருக்கிறது. பெண் தன் உரிமைக்காக போராடக்கூடியவளாகவே இருக்கிறாள். எத்தனை தான் பெண் பொருளாதார சமத்துவம் பெற்றிருந்தாலும் அவளின் ஆளுமை சில இடங்களில் மட்டுமே வெளிப்படுகின்றன. காதல் பெண்களுக்கு சிலநேரங்களில் அடக்கு முறையாகவும் ஆதிக்கமாகவும் மாறும் நிலை ஏற்படுகிறது.

ஒரு சூழலுக்கு ஏற்ப நடந்து கொள்வதும் ஆளுமை தான். இதை புறம் போக்கு உணர்வை தீர்ப்பது (ESFJ) என்பார்கள். மற்றவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் மிகுந்த கவனம் செலுத்துபவர்களாக இருப்பவர்கள்,

**"நேசிப்புக்கு எடுத்த ஜென்மம்**
**கறிதின்னும் அப்பாவுக்குக்**
**கை கூசாமல் சமைத்தளிக்கும்**
**கடும் சைவக்காரி"**

(ஒரு கிராமத்து நதி, பக்.28)

தான் சைவமாக இருந்தாலும் அசைவம் சாப்பிடும் கணவனுக்கு கறிசமைத்து தன் கடமையை செய்யும் பன்முக ஆளுமை வெளிப்பாடாக இருக்கிறது. ஆளுமை பெண்ணின் நடத்தை மூலம் மட்டும் வெளிப்படுவதில்லை. உணர்வுப் பூர்வமாக அவர்களை உணர்ந்து அவர்களை ஆள்வது. இதை கவிஞர் சிற்பி அவர்கள்,

**"ஊரையே தூக்கும்**
**அப்பாவின் கோபத்தை**
**ஒற்றைப்பார்வையால்**
**செதுக்கி ஊமையாக்குவாள்"**

(ஓடுஓடு சங்கிலி.பக்.29)

கல்வியறிவு இல்லாத பெண்கள் தன் தொழிலில் ஏற்படும் பிரச்சனைகளைக் . கண்டு துவண்டு விடாதவர்களாகவும் ஆளுமை நிறைந்தவர்களாகவும் இருப்பதை நா. முத்துக்குமார் மனுஷிகள் என்ற கவிதையில்,



Scanned by CamScanner

"கள்ளுக்கடையில்
'சாசகா' விற்பவள்
கெட்டவார்த்தைத் துணையால்
காத்துக் கொள்கிறாள்
கடையையும் கற்பையும்
பத்து வருடமாய்
மிளகாய்த் தூளுக்கு மத்தியில்
மதுக்குப்பி மறைத்து
பாண்டிச்சேரியிலிருந்து
கடத்தி விற்கமுடிகிறது
பேச்சியம்மா கிழவியால்
அய்யா தெருவிலும்
விற்று விடுகிறாள்
கருவாட்டுக்காரி" (பட்டாம் பூச்சி விற்பவன், பக்.19)

என்னும் கவிதை பெண்கள் அன்றாடப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் சூழல்களை ஆராய்ந்து தன் வேலைகளை எளிமையாகச் செய்து முடிக்கும் ஆளுமையையும் இக்கவிதையில் காணமுடிகிறது.

மனப்பத்தாயம் என்ற கவிதையில்

"விரையும் பேருந்தில்
விடாது குழந்தையழ
முந்தியோடு
கூச்சத்தையும்
விலக்கும் தாயன்பு"
(யுகபாரதி, ப.48. மனப்பத்தாயம்)

என்ற கவிதையில் தாயின் அன்பு ஆளுமையோடு வெளிப்படுகிறது. உழைக்கும் பெண்கள் சுற்றி இருக்கும் சூழலை எதிர் பார்க்காது தனது தொழிலைச் செய்கிறார்கள் என்பதை,

"முத்திர வாடை நிரம்பி வழியும்
பேருந்து நிலையத்தில்
முழம் போட்டு
விற்றுக் கொண்டு தான்
இருக்கிறாள் பூக்காரி" (மேலது, ப.82)

துன்பத்தில் நின்று வேதனைப்படும் பெண் தன் வாழ்க்கையை சாதனையாக்க ஆளுமையானவளாக இருக்கவேண்டும் என்பதை இக்கவிதை எடுத்துக்கூறுகிறது.

முதன் முதலாய் அம்மாவுக்கு என்ற கவிதையில் தனக்கு கட்டுப்படாத மகனை மன்னிக்காது இறுதிவரை வாழ்ந்த தாயின் ஆளுமையை வைரமுத்து அவர்கள்,

"அஞ்சாறு வருசம் உன்
ஆசமொகம் பாக்காமப்
பிள்ளைமனம் பித்தாச்சே
பெத்தமனம் கல்லாச்சே..."
(வைரமுத்து, கொஞ்சம் தேநீர் நிறைய வானம்)

மேலும் பெண் நேற்று இன்று நாளை என்ற கவிதையில் பெண்ணின் முப்பரிணாமத்தை எடுத்துக்கூறுகிறார். அன்று உரிமையை இழந்தவளாகவும் இன்றையகாலக் கட்டத்தில் உரிமைக்காக போராடுபவளாகவும், நாளை ஆணின் உரிமையையே பறித்துக் கொள்பவளாகவும் இருப்பதாக கூறுகிறார். அதை

இந்திரியம் நனைத்த உம்
ஜமக்காலம் மட்டும் கவர்ந்து கொண்டு
போகிறேன் மகராஜ்
................................
இன்று
கள்ளமன்மதா!
உலகறியமாலையிடு
இல்லையேல்
உன் தெருமுனையில் ஊர்கூட்டித்
திறந்த வெளியில் பிரசவிப்பேன்
நாளை
பகலில் உடன்படாது உனக்கும் எனக்கும்
பிரசவச் செலவு நீ ஏற்பின்
பெற்றுத் தருவேன் உன்சதைப்பிம்பம்
சுமக்கவோ
கலைக்கவோ
இமெயல் அனுப்பு



Scanned by CamScanner

என்ற கவிதை உடல் சார்ந்த ஆளுமையையும் கூறுவதாக உள்ளது. முரண்பட்ட கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளவளாக இருக்கிறாள். ஒரு பெண்ணின் ஆளுமை குழந்தைகளை வளர்க்கும் முறையிலும் வெளிப்படுகிறது.

**மூளைக்கு நல்லது என்று**
**மருத்துவ குணம்கூறி**
**அதன் காய்களில் ஒளிந்திருக்கும்**
**என் அல்ஜீப்ரா கணக்கிற்கான**
**விடைகளை நோக்கி**
**ஆற்றுப்படுத்துவாள் அம்மா''**

(நா.மு.கவி.ப.72)

நேர்மையான சிந்தனைகளோடும் வேகமான செயல்பாடுகளும் பெண்ணின் ஆளுமைக்குத் துணைநிற்கின்றன.

### முடிவுரை

இலக்கியங்கள்யாவும் பெண்ணின் ஆளுமையைக் கூட ஆணின் ஆளுமைக்கு உட்பட்ட ஆளுமையாக சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன. கற்பு, காதல், பாசம், பாரம்பரியம், நம்பிக்கை, பக்தி போன்றவைகளால் பெண் ஆளுமையைக் கைவிட்டு விடுபவளாக இருக்கிறாள். இலக்கியங்களுக்கும், இதிகாசங்களுக்கும் பெண்ணின் ஆளுமையை ஒப்பனையாகவே கையாள்கிறார்கள் என்பது ஆய்வின் முடிவாகிறது.

### துணைநூற்பட்டியல்

1. நா.முத்துகுமார் கவிதைகள், பட்டாம்பூச்சிப் பதிப்பகம், சென்னை.
2. வைரமுத்து கவிதைகள், திருமகள் நிலையம், சென்னை.
3. ஒரு கிராமத்து நதி, கவிதா வெளியீடு, கோயம்புத்தூர்.
4. குறுந்தொகை, நியூசெஞ்சுரி புக்'வுஸ், சென்னை.